**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 155/2022 PW .2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முத்துகருப்பன் | தந்தை/கணவர் பெயர்: சின்னகருப்பன் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of26.03.2026

---

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>26.03.2026 முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சிங்கம்புணரியில் குடியிருந்து வருகிறேன் . அ.சா.1 எனது மனைவி வழக்கின் எதிரிகள் எனது நண்பர்கள் ஆவார் . சுமார் 5 வருடங்களுக்கு முன்பு தேதி , மாதம் ஞாபமில்லை ஒருநாள் எனது வீட்டின் அருகேயுள்ள பழைய இரும்பு கடை முன்பு நான் இருந்த போது அங்கே கூட்டமாக இருந்ததார்கள் . கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்துவிட்டேன் . எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**
**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. நான் தற்போது எதிகளுடன் சமதானம் ஆகி நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . நான் போலீஸ்சார் விசாரணையில் கடந்த 17.09.2021ம் தேதி மாலை 5.00 மணிக்கு நான் மணப்பட்டி பாளையா என்பவரது பழைய இரும்பு கடை அருகே இருந்தபோது அங்குவந்த ஆஜர் எதிரிகள் என்னை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி , 1வது எதிரி பீர் பாட்டிலை வைத்து என்னை முதுகில் குத்தி காயத்தை ஏற்படுத்தினார் என்றும் , 2 வது எதிரி மற்றொரு பீர் பாட்டிலை உடைத்து என்னை தலையில் குத்தினார் . காயத்தை ஏற்படுத்தி எதிரிகள் இருவரும் சேர்ந்து என்னை பார்த்து கொலை மிரட்டல்

விடுத்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3.எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:** இல்லை